


# தொற்றா நோய் கண்டோருக்கான மலேசிய ஆலோசனை அட்டவணை






NCD MALAYSIA

NCD Alliance

OUR VIEWS, OUR VOICES

An initiative by the NCD Alliance and people living with NCDs

# நன்றி நவில்தல்

உலக தொற்றா நோய்கள் கண்டவர்களுக்கான இயக்கத்துடன் ஒன்றிணைந்து தொற்றா நோய்கள் கண்ட மலேசியர்களான(PLWNCDs) எங்களின் குரல் மற்றும் கருத்துகளைச் செவிமெடுக்கவும் அர்த்தமுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தவும் ‘மலேசிய NCD இயக்கம்’ இந்தஆலோசனை அட்டவணையை உருவாக்கியுள்ளது. தொற்றா நோய்கள் கண்டோருக்கானஉலக ஆலோசனை நிகழ்ச்சி நிரல்உண்மையில்கருத்தரங்க குறிப்புகளாகும். இவற்றினால் ஈர்க்கப்பட்டதன் காரணமாக உருவாக்கப்பட்ட ஆலோசனை நிகழ்ச்சி நிரலை தொற்றா நோய்கள் கண்டவர்களுக்கான கூட்டு இயக்க அகப்பக்கத்தில் காணலாம்.

மலேசிய NCD இயக்கம் கீழ்க்கண்டவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

i) சமூக உரையாடல்களில் பங்கேற்றுக் கருத்துகளைத் தெரிவித்த எங்கள் உறுப்பினர்கள்,சமூக கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள்,நோயாளிகள்மற்றும்தொற்றா நோய்கள் கண்ட தனிநபர்கள்.

ii) இந்த ஆலோசனை நிகழ்ச்சி நிரல்(PLWNCDs) வடிவமைப்பிற்கு உறுதுணையாக இருந்த உலக தொற்றா நோய் கண்டோர் நிபுணர் குழு உறுப்பினர்கள்.

iii) இந்த முயற்சிக்கு பங்களிப்பு மற்றும் உள்ளடக்கங்களை வழங்கிய குமாரி மஞ்சுஷா சட்டெர்ஜி மற்றும் உலக NCD கூட்டுசெயற்குழுவினர்.

## உலக NCD கூட்டு செயற்குழுவினர்

1. Dr K Thiruchelvam
2. Mr Dominic Wong
3. Mr Harikrishnan Maniam
4. Mr Muhammad Mustaqim bin Izhar
5. Pn Zulaikha binti Mohamed Ali
6. Mdm Sew Boon Lui
7. Ms Siow Li Yin
8. Mdm Yeoh Kim Yeok
9. Pn Norlela binti Samad
10. Ms Siti Aishah binti Jamri

Published by NCD Malaysia
Copyright © 2021 NCD Malaysia, care of The National Cancer Society of Malaysia
Printed in Kuala Lumpur, Malaysia

All pictures were taken during the community conversations hosted by NCD Malaysia in partnership with NCD Alliance from September to December, 2020 in Malaysia, bringing together over 108 participants who are people living with NCDs (PLWNCDs).

Editors: Dr Murallitharan M. , Mandy Thoo
Translated by: 1. Malay (Ms Mahirah Ma’som)
2. Tamil (Mr Ragupathy Rengasamy)
3. Mandarin (Mr Tan Jia Hwong)
Photos: ©NCD Malaysia, care of The National Cancer Society of Malaysia
Design and layout: Mar Nieto
Released in 2021

NCD Malaysia (Secretariat)
c/o The Department of Health Education, Literacy, Promotion and Policy,
National Cancer Society Malaysia
66, Jalan Raja Muda Abdul Aziz,
50300 Kuala Lumpur, Malaysia

NCD Malaysia

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| நன்றி நவில்தல் | 2 |
| உள்ளடக்கம் | 3 |
| நாங்கள் தொற்றா நோய்கள் கண்ட மலேசியர்கள்.எங்கள் குரலுக்கு செவிசாய்ப்பீர்! | 4 |
| பின்னணி | 5 |
| ஆலோசனை அட்டவணையைஉருவாக்குதல் | 7 |
| மனித உரிமையும் சமூக நீதியும் | 10 |
| தடுப்பு நடவடிக்கை | 13 |
| சிகிச்சை மற்றும் ஆதரவு | 17 |
| அர்த்தமுள்ள ஈடுபாடு | 20 |




# தொற்றா நோய்கள் கண்ட மலேசியர்களான எங்கள் குரலை செவிமடுப்பீர்!

நாங்கள் மலேசியர்கள்

எங்களுக்கு தொற்றா நோய் கண்டுள்ளது.

நோய்களைக் கொண்டு எங்களைவகைப்படுத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம்.

நாங்கள் தனிநபர்கள் தான்.எனினும், நாங்கள் தந்தையர், தாய்மார்கள், மகள்கள், பணியிடத் தோழர்கள், அண்டை வீட்டார் மற்றும் சமூக உறுப்பினர்களாகவும் வாழ்கிறோம்.

நாங்கள் தனிநபர்கள். ஆனால் எங்களுக்கும் உரிமைகள், எதிர்பார்ப்புகள் மற்றும் கனவுகள் உள்ளன.

நாங்கள் எங்களின் குடும்பத்திற்காகத் தொடர்ந்து பங்காற்றி வருகிறோம், சமூகத்தில் ஆக்கப்பூர்வமான உறுப்பினர்களாக விளங்கும்நாங்கள் எங்கள் நேசமிக்க நாட்டின் மேம்பாட்டிற்காக முக்கிய பங்காற்றி வருகிறோம்.

எங்கள் கோரிக்கைகள் செவிமெடுக்கப்பட வேண்டும் என்பதற்காக நாங்கள் ஒன்றிணைந்து குரல் கொடுக்கிறோம்.

தொற்றா நோய்கள் கண்டுள்ள அனைத்து மக்கள் குறிப்பாகதங்கள் குறைகளை எடுத்துச் சொல்ல இயலாத மூத்த குடிமக்கள், நோயாளிகள், ஏழைகள் மற்றும் கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்காக நாங்கள் குரல் கொடுக்கிறோம்.

தொற்றா நோய் கண்டவர்களின் கோரிக்கைகள் மீது நமது அரசாங்கம் மற்றும் அரசியல் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்கள்வலியுறுத்துகிறோம்.

தொற்றா நோய்களை நிர்வகிக்கவும் கட்டுப்படுத்தவும் முறையான வளங்கள் தேவை என்று நாங்கள் கோருகிறோம்.

நமது குழந்தைகள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் அனைவரும் இந்த தொற்றா நோய்களின்றி வாழும் பொருட்டு தொற்றா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம்.

ஆரோக்கியமான சுற்றுச்சூழலில் வாழ்வதற்கான உரிமையை நாங்கள் கோருகிறோம்.

அனைவரும் சரிசமமான சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு பெற வேண்டும் என்ற உரிமையைக் கோருகிறோம்.

நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ வேண்டும் என்ற எங்கள் உரிமைக்காக நாங்கள் போராடுகிறோம்.

எங்கள் வாழ்க்கைக்காகவும் எதிர்கால சந்ததியினரின் வாழ்க்கைக்காகவும் போராடுவதற்கு நாங்கள் ஒன்றிணைந்துள்ளோம்.

தொற்றா நோய்களை வெற்றி கொண்ட ஓர் உலகத்தை உருவாக்குவதற்கு எங்களுடன் இணையும்படி உங்களுக்கு அழைப்பு விடுக்கிறோம்.

தொற்றா நோய்களுடன் வாழும் மலேசியர்கள் நாங்கள்.

இதுவே எங்கள் ஆலோசனை அட்டவணையாகும்.

**இது எங்கள் குரல். எங்களின் குரல் செவிமடுக்கப்பட வேண்டும்.**

# பின்னணி

நாடு முழுவதிலும் கோவிட்-19 தொற்றின் பரவல் காரணமாக பல்வேறு துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. தொற்றா நோய்கள் துறையிலும் கோவிட்-19 பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தொற்று பரவல் காரணமாக, ஏற்கனவே பற்றாக்குறையாக இருந்த மருத்துவ சாதனங்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் , அனைத்து நிலையிலான கோவிட்-19 நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு பயன்படுத்துகின்றன.

மேலும், தொற்றா நோய்கள் இல்லாதவர்களைக் காட்டிலும் தொற்றா நோய்கள் கண்டவர்கள் இந்த வைரல் பீடிப்பதற்கான சாத்தியம் அதிகம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இந்த தகவலானது, நீண்ட காலம் தொற்றா நோய்கள் காரணமாக அவதியுற்று வரும் நோயாளிகளுக்கு மேலும் உடல் உபாதை மற்றும் மருத்துவ சவால்களை சந்தித்து வருவோருக்கு மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

கோவிட்-19 தொற்று நம் நாட்டை தாக்குவதற்கு முன்னதாகவே, தொற்றா நோய்கள் கண்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் மலேசியா பல்வேறு சவால்களை எதிர்நோக்கி வந்தது. 2019ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆகக் கடைசியான தேசிய மருத்துவ மற்றும் நோயுற்ற தன்மை மீதான ஆய்வின் மூலம், நாட்டின் மக்கள் தொகையில் 18.3% இரத்த அழுத்த நோய், 30% நீரிழிவு நோய் கண்டுள்ளனர் மற்றும் 38.1% அதிக கொழுப்பு தொடர்பான நோய்களினால் அவதியுறுகின்றனர் என்று தெரிய வந்துள்ளது.

புற்று நோய் மற்றும் மன நல நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ள வேளையில் அவற்றின் சிகிச்சைகளில் பெருமளவு மேம்பாடு ஏதும் காணப்படவில்லை. அந்த நோயுற்றவர்களின் அபாய சாத்தியங்களுக்கான எண்ணிக்கையிலும் பெரிதும் மாற்றமில்லை. மலேசியர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் உடல் எடை அதிகம் அல்லது பருமனாக உள்ளனர், அவர்களில் கால் வாசி பேர் உடல் ரீதியான செயல்பாடுகளற்றவர்களாக உள்ளனர். 21% புகைப் பிடிப்பவர்களாகவும் 11.7% மதுப்பழக்கம் உடையவர்களாக உள்ளனர்.

தொற்றா நோய்கள் கண்டவர்கள் குறிப்பாக இருதய, நீரிழிவு மற்றும் புற்று நோயாளிகளுக்கான செலவுகளால் மலேசியாவின் பொருளாதார செலவினம் 8.91 பில்லியனாக உயர்ந்துள்ளது ( தொற்றா நோய்கள் கண்டவர்கள் வேலையில் இருந்து விடுப்பு மற்றும் ஆக்கப்பூர்வ ஈடுபாடின்மை மற்றும் மரணச் சம்பவங்களினால், உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 0.65% இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், இவர்களது செயலாற்றும் ஆற்றல் குறைவு மற்றும் ஆரோக்கிய வாழ்வு இழப்பினால் ஏற்படும் செலவினம் சுமார் 100.79 பில்லியன் வெள்ளி அல்லது உள்நாட்டு உற்பத்தியில் 7.35% ஆகும்).

இதன் மொத்த செலவினம் இன்னும் கணக்கிடப்படவில்லை என்றாலும், உலகளவில் மிகவும் உக்கிரமாக பரவி வரும் தொற்றினால், தொற்றா நோய் கண்டவர்களின் மீதான கவனம் குன்றி அவர்களின் நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது. இத்தரப்பினரின் ஆரோக்கிய நிலையை மதிப்பிட்வதிலும் பெரும் சவால்களை எதிர்நோக்குவதாக தொற்றா நோய்களால் அவதியுறுவோரின் அமைப்புகள் கூறுகின்றன.

இந்தத் தரப்பினருக்கான மருந்து வகைகள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால், இவர்களின் சிகிச்சைகளும் தாமதமாகின்றன. ஏற்கெனவே சிரமத்தை எதிர்நோக்கிய சூழ்நிலையில் தொற்றா நோய்கள் கண்டோருக்கான பராமரிப்பு நிர்வாக நடவடிக்கைகளுக்கு பெரும் தடை ஏற்பட்டு அவர்களின் ஆயுளுக்கு குந்தகம் விளைவிக்கும் நிலை மேலும் மொசமடைந்துள்ளது.

தொற்றா நோய்கள் கண்டவர்களின் கூக்குரல் செவிமெடுக்கப்படுவதற்கான நேரம் இதுவாகும். இவர்களின் வாழ்க்கை மீதும் இவர்களின் நோய் நிர்வாகத்தின் மீதும் சமூகம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். உலகளவிலான தொற்றா நோய்கள் கண்டவர்களின் அமைப்புகள் ஒன்றிணைந்து அரசாங்கம் மற்றும் சமூக அமைப்புகள் நடவடிக்கை எடுக்கும்படி குரல் கொடுக்க வேண்டிய தருணம் இது. சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான மலேசிய தோற்றா நோய்களுக்கான அமைப்பு இந்த கவன ஈர்ப்பு நடவடிக்கைக்கு உத்வேகம் அளிக்க முழு மூச்சாய் இறங்கியுள்ளது.

மலேசியாவில் உள்ள தொற்றா நோய்கள் கண்டவர்களின் தேவைகள் மற்றும் முக்கியத்துவத்தை பிரதிபலிக்கவும் நடைபெற்று வரும் கவன ஈர்ப்பு நடவடிக்கை வெற்றி பெறவும் தேசிய தொற்றா நோய்களுக்கான

அமைப்பு அதன் அனுபவம், கருத்துணர்வுகள் மற்றும் இடைவிடாத இலட்சியம் மிகவும் அவசியமாகும்.

நம் குரல் செவிமெடுக்கப்படுவதை உறுதி செய்வோம்.

# ஆலோசனை அட்டவணை தயாரிப்பு

மலேசியாவில் வாழும் தொற்றா நோய்கள் கண்டவர்களின் ஒட்டுமொத்த கோரிக்கைகளை முன்வைப்பதே மலேசிய தேசிய தொற்றா நோய்களின் ஆலோசனை அட்டவணையாகும். 2020ஆம் ஆண்டில் கோவிட்-19 தொற்று பரவலுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்ட சமூக உரையாடல்களின்போது பல்வேறு வகையான தொற்றா நோய்கள் கண்டவர்களின் அனுபவங்களின் திரட்டலே இந்த ஆலோசனை அட்டவணை தொகுப்பாகும்.

நாம் சந்திக்கும் சவால்கள் மற்றும் நோய்களை நிர்வகிப்பதற்கான தேவைகளை ஒருமித்த குரலாக ஒலிக்கச் செய்வதே இந்த ஆலோசனை அட்டவணையின் இலக்காகும்.

இந்த ஆலோசனை அட்டவணையானது உலக தொற்றா நோய்கள் அமைப்பு மற்றும் Access Accelerated ஒத்துழைப்புடன் சில பங்காளித்துவ கூட்டு முயற்சிகளுடன் மலேசிய தொற்றா நோய்களின் அமைப்பினால் மேம்படுத்தப்பட்டது. நமது கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவை அனைவராலும் செவிமடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த அட்டவணை முறையாக வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது.

மலேசிய தொற்றா நோய்களின் இந்த அட்டவணை தொகுப்பின் பங்காளித்துவ உறுப்பினர்கள் கடந்த 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம், நாடு முழுவதும் உள்ள அமைப்பின் பிரதிநிதிகளுடன் நேரிடையாக அல்லது இணையம் வழி கலந்துரையாடல்களில் மற்றும் ஒரு சுற்று நோட்டம் பங்கேற்றனர்.

இதனையடுத்து இந்த சமூக கலந்துரையாடல்களில் பங்கேற்கும்படி நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் தொற்றா நோய்கள் அமைப்புகள் மற்றும் இதர வகை தொற்றா நோய்கள் அமைப்புகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தொற்றா நோய்கள் கண்டவர்களின் குரல்கள் உண்மையாக செவிமடுக்கப்படுவதை உறுதிப்படுத்த இந்த சமூக உரையாடல்கள் மற்றும் சுற்று நோட்டங்கள் மலாய், ஆங்கிலம், மாண்டரின் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மேற்கொள்ளப்பட்டன.

இது பல்வேறு இனத்தவர்களின் குரல்களைப் பிரதிபலிப்பதோடு அவர்களின்அனுபவபூர்வ ஆதாரங்கள் இடம் பெறுவதற்கான வாய்ப்பையும் அளித்துள்ளது.

இந்த சமூக உரையாடல்கள் நேர்மையான முறையில் நடத்தப்பட்டது. இவற்றில் பங்கேற்ற தொற்றா நோய்கள் கண்டவர்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை எடுத்துரைப்பதற்கும் அடையாளம் காணப்பட்ட பல்வேறு மலேசிய தொற்றா நோய்கள் கண்டோர் அமைப்புகளிடம் பல்வேறு கேள்விகள் கேட்பதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.

ஒட்டு மொத்தத்தில், இந்த ஆலோசனை அட்டவணைக்கு உயிரூட்டும் வகையில் 11 விதமான நோய்கள் கண்ட 108 தொற்றா நோய்கள் கண்டோரும் இதில் பங்கேற்று தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். அதே வேளையில், தொற்றா நோய்கள் கண்டோர் அமைப்புகளின் தலைவர்கள் மத்தியில் நிபுணர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட குழுவினர் தாங்கள் பிரதிநிதிக்கும் சமூகம், ஆதரவு குழுக்கள் மற்றும் அமைப்புகளின் சார்பில் எடுத்துரைத்த கருத்துகள் இந்த ஆலோசனை அட்டவணையின் இறுதி பகுதியில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

மலேசியாவில் தொற்றா நோய்கள் கண்டோர் எதிர்நோக்கும் சவால்களை இந்த ஆலோசனை அட்டவணைசுட்டிக் காட்டியிருப்பதோடு 4 முக்கிய பிரிவுகளில் உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் கோரியுள்ளது.

- **மனித உரிமை மற்றும் சமூக நீதி**
- **தடுப்பு நடவடிக்கை**
- **சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு**
- **முழு ஈடுபாடு**

இப்பகுதிகள் யாவும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உடையவை. அதோடு, தொற்றா நோய்கள் கண்டோரின் பங்கேற்புக்கும்

ஆதரவுக்கும் உறுதுணையாக ஆக்கப்பூர்வ மாற்றங்கள் ஏற்படுத்தக்கூடியவை. தொற்றா நோய்களைத் தடுக்க மற்றும் கட்டுப்படுத்த எங்களின் குரல்கள் மட்டுமல்லாது சமூகத்தின் ஒட்டுமொத்த முயற்சியான இந்த ஆலோசக அட்டவணை தயாரிப்பு மலேசிய தொற்றா நோய்களின் திசைகாட்டி மற்றும் வழிகாட்டியாகவும் அமைய வேண்டும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பாகும்.


C5

# மனித உரிமை மற்றும் சமூக நீதி

## உள்ளடக்கம்

மருத்துவத்தில் மனித உரிமை மற்றும் சமூக நீதி என்பது கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும். (1) உடல் மற்றும் மன நலம் மிகச் சிறந்த நிலையில் இருப்பதற்குத் தரமான சேவையைப் பெறும் உரிமை; (2) சட்டத்திற்கு முன் சரிசமமான உரிமை (3) சமூக பாதுகாப்புக்கான உரிமை; (4) கல்வி கற்பதற்கான உரிமை (5) கலாச்சார சுதந்திரம் மற்றும் அறிவியல் மேம்பாட்டை அனுபவிப்பதற்கான உரிமை; (6) சிறுபான்மையினர் பாதுகாப்புக்கானஉரிமை மற்றும் (7) நியாயமான மற்றும் விரும்பும் சூழலில் வேலை செய்யும் உரிமை

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சுகாதார பராமரிப்பு சேவையைப் பெறுவதில் மட்டும் உரிமை கிடையாது. மாறாக சுகாதார பாதிப்புக்கான காரணங்களை உணர்வதற்கான உரிமையும் உண்டு. அனைவருக்கும் இயன்ற வரை ஆரோக்கியமான சூழல்களை ஏற்படுத்தித் தருவது அரசாங்கத்தின் கடமையாகும்.

## எங்கள் பிரச்னைகள்

தொற்றா நோய்கள் கண்டுள்ள நாங்கள் பல்வேறு வகையான மனித உரிமை மீறல்களைச் சந்தித்து வருகிறோம். எங்களுக்கு ஆரோக்கியமான சூழலில் வாழ்வதற்கான உரிமை மறுக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு சேவையைப் பெறுவதில், தனிநபர், சமூக மற்றும் பொருளாதார பின்னணி ஆகியவற்றின் அடிப்படையில் எங்களுக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.

நமக்கு நோய் இருப்பது கண்டறியப்பட்ட பின்னர் நம்மைப் பாதுகாப்பதற்குப் போதுமான சட்டம் இல்லை. நமது நோயை நன்கு நிர்வகிப்பதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் கல்வியைப் பெறுவதற்கான உரிமை பெரும்பாலும் மறுக்கப்படுகிறது. சுகாதார பராமரிப்பு நிறுவனங்கள், வேலையிடங்கள் மற்றும் பொது இடங்களில் நம்மீது பாகுபாடு காட்டப்படுகிறது.

## எங்களின் கேள்விகள்

**தொற்றா நோய்கள் கண்டவர்களான நாங்கள் கீழ்க்காணும் கோரிக்கைகளை முன் வைக்கிறோம்.**



### அரசாங்கம்

i) வேலையிடங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் எங்களுக்கான சமூக பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும்.

ii) உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டங்களில் தொற்றா நோய்கள் கண்டோர் அமைப்பு இடம் பெறும் வகையில் தேசிய மேம்பாட்டு திட்டங்கள் மற்றும் அரசாங்க கொள்கை திட்டமிடலிலும் இதனை உட்படுத்த வேண்டும்.

iii) அனைத்து நிலைகளிலும் பாகுபாடு எதிர்ப்பு கொள்கை வாயிலாக தொற்றா நோய்கள் கண்டோர் அமைப்பு எதிர்நோக்கும் சமூக,கலாச்சார வேறுபாடுகள் பிரச்னை களையப்பட வேண்டும்.

v)தொற்றா நோய் கண்டோருக்கான உரிமைகள் மற்றும் அவர்களுக்கு எதிரான பாரபட்ச நடவடிக்கைகளைப் புரிந்து கொள்வதோடு அவற்றைக் குறைப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட வேண்டும்.

## மக்கள் பிரதிநிதிகள்
(நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்)



i) கொள்கை இயற்றும் நிலைகளில் தொற்றா நோய்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

ii) தொற்றா நோய் கண்டோர் தொடர்பான கொள்கை அமலாக்கங்களில் அனைத்து நிலைகளையும் மேற்பார்வை இடுவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

iii) அனைத்து அரசியல் நிலைகளிலும் தொற்றா நோய் கண்டோரின் உரிமை மற்றும் பாதுகாப்பு குறித்த ஆலோசனை தொடர்ந்து நடைபெற வேண்டும்.



## சுகாதார அமைச்சு

i) மனித நேயம், கௌரவம் மற்றும் மரியாதையுடன் கூடிய சிகிச்சை அளிப்பதற்கு ஏதுவாக சுகாதார பராமரிப்பாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

ii) சுகாதார பராமரிப்பின்போது தொற்றா நோய் கண்டோர் மீது மேற்கொள்ளப்படும் பாரபட்ச நடவடிக்கைகளுக்கு எதிராக கட்டமைப்பு பணி அமல்படுத்தப்பட வேண்டும்.

iii) சிறுபான்மையினர் மத்தியில் தொற்றா நோய் கண்டோரின் சுகாதார உரிமைகளைப் பாதுகாக்கும் கொள்கைகள் செயலாக்கம் காண்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

## சுகாதார பராமரிப்பு சேவை வழங்குவோர் மற்றும் சுகாதார பணியாளர்கள்



i) பராமரிப்பு சேவையின்போது தொற்றா நோய் கண்டோர் முறையாகவும் மரியாதையுடனும் நடத்தப்படும் வகையில் வேலையிட கலாச்சாரம் மேம்படுத்தப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

ii) சிறுபான்மையினர் மத்தியில்காணப்படும் தொற்றா நோய் கண்டோருக்கு சிறப்பான சேவைகள் வழங்கப்படுவதற்குத் திட்டமிட வேண்டும்.



## தனியார் துறை மற்றும் வர்த்தக சமூகம்

i) தொற்றா நோய் கண்டோர் மீது பாகுபாடு எதிர்ப்பு கொள்கை அமல்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

ii) தொற்றா நோய் கண்டோர் மற்றும் அவர்கள் மீது பரிவு கொள்வோருக்கு வேலை பாதுகாப்பு வழங்கப்படும் வகையில் வேலையிட பரிவுமிக்க கலாச்சாரம் உருவாக்கப்பட வேண்டும்.

iii)தங்களின் நடவடிக்கை மற்றும் முயற்சிகளில் தொற்றா நோய் கண்டோரின் தேவைகளை கருத்தில் கொண்டு அவர்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும்.

iv)தொற்றா நோய் கண்டோர் குறிப்பாக மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் பிரத்தியேக வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

## சமூக பொது அமைப்புகள்



i) சிறுபான்மையினர் மத்தியில்  தொற்றா நோய் கண்ட தரப்பினர் குறிப்பாக அவர்களைப் பாரபட்ச நடவடிக்கைகளில் இருந்து  பாதுகாப்பது குறித்து விவாதிக்க வேண்டும்.

ii) சிறுபான்மையினர் மத்தியில்காணப்படும்  தொற்றா நோய் கண்ட தரப்பினருக்கு கல்வி மற்றும் விழிப்புணர்வு மூலம் தங்களின் உரிமைகள் குறித்து  எடுத்துரைக்க வேண்டும்.

iii) தொற்றா நோய் கண்ட தரப்பினர் குறிப்பாக சிறுபான்மையினர்  எதிர்நோக்கும் பாரபட்ச நடவடிக்கைகள் குறித்து குரலெழுப்புவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.



## தொற்றா நோய் கண்டோர் அமைப்பினர்

i) அனைத்து நிலைகளிலும் தொற்றா நோய் கண்ட தரப்பினரின்  உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து எடுத்துரைக்க வேண்டும்

ii) தொற்றா நோய் கண்ட தரப்பினர் எதிர்நோக்கும் பாரபட்ச நடவடிக்கைகள் குறித்து குரலெழுப்புவதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

iii) நீங்கள் அல்லது தொற்றா நோய் கண்டோர் எதிர்நோக்கும் பாரபட்ச நடவடிக்கைகளுக்கு எதிராக குரலெழுப்ப வேண்டும்.

# தடுப்பு நடவடிக்கை

## உள்ளடக்கம்

தொற்றா நோய் கண்டோர் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு என்பது சம்பந்தப்பட்ட நோய்களுடன் வாழ்பவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை தொடர்பானது. தொற்றா நோய் தடுப்பு என்பதன் முக்கிய அம்சம் தனிநபர்களை தொற்றா நோய்களில் இருந்து தடுப்பது அல்லது இந்நோய் கண்டோர் கூடுதல் தொற்றா நோய்களால் பீடிக்கப்படுவதைத் தடுப்பதாகும்.

தனிநபர் ரீதியில் இந்த நோய்கள் பீடிப்பதற்கான சாத்தியக் கூறுகளான புகைப்பிடிப்பது, ஆரோக்கியமற்ற உணவு முறை, உடற்பயிற்சி இல்லாதது மற்றும் அளவுக்கு மிஞ்சிய குடிப்பழக்கம் போன்றவையாகும். ஆயினும், இவை மாற்றியமைக்கக் கூடியவை. சமூக ரீதியில்இந்நோய்கள் தாக்குவதற்கான அபாயங்களை ஏற்படுத்தக்கூடிய தனிப்பட்ட விஷயங்களான வறுமை, கல்வி, பொருளாதாரம் மற்றும் சமூக அந்தஸ்து போன்றவை ஆகும்.

இதன் காரணமாகதொற்றா நோய்களில் இருந்து தடுப்பதற்கு இரு முக்கிய வியூகங்கள் அமல்படுத்தப்பட வேண்டும். அவை: (1) மாற்றியமைக்கக் கூடிய காரணங்களுக்கு ஆளாகுவதைக் குறைப்பது மற்றும் (2) இந்நோய்களை ஏற்படுத்தும் பிற பாதிப்புகள்; குறிப்பாக நலிந்த பின்னணியைக் கொண்ட மக்கள் மத்தியில் குறைக்கப்பட வேண்டும்.

## எங்கள் பிரச்னைகள்

தொற்றா நோய் கண்டவர்களான நாங்கள் மாற்றியமைக்கக் கூடிய காரணங்கள் மற்றும் இதர பாதிப்புகளின் தாக்கங்களை முழுமையாக உணர்ந்துள்ளோம். சமூகத்தின் பாகுபாடு மற்றும் சமத்துவமற்ற நடவடிக்கையால் ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்குரிய வாய்ப்புகளை நாங்கள் இழந்துள்ளோம்.

தொற்றா நோய் கண்டோரான நாங்கள் மாற்றியமைக்கக்கூடிய காரணங்கள் மற்றும் இதர பாதிப்புகளின் தாக்கங்களை முழுமையாக உணர்ந்துள்ளோம். எங்களின் ஆரோக்கிய வாழ்க்கைக்கான வாய்ப்பைப் பறிக்கும் சமூக

சமத்துவமற்ற மற்றும் சமநிலையற்ற சூழல்களால் நாங்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளானோம்.

பல்வேறு வகையான அபாய சாத்தியக்கூறுகள் மற்றும் அவற்றினால் ஏற்படும் ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வின்றி நாங்கள் அவதியுற்றோம். ஊட்டச்சத்து, மதுபானம் மற்றும் புகையிலை பொருள்கள் குறித்த தவறான விளம்பரங்களால் நாங்கள் அவ்வப்போது ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

தற்போது நாங்கள் அவதியுற்று வரும் தொற்றா நோய்களால் பாதிப்புறுவதைத் தவிர்க்கக்கூடிய தொடக்க நிலை சுகாதார தலையீடுகள் குறித்த வாய்ப்புகள் எங்களுக்கு மறுக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாகவே, எங்கள் குழந்தைகள் மற்றும் அடுத்த தலைமுறையினர் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சுற்றுச்சூழலில் வாழ்வதை உறுதி செய்வதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

நாம் மாற வேண்டும். நமது சமுதாயத்தில் தொற்றா நோய் கண்டோர் குறித்த மருட்டல்களைக் குறைக்க நாம் மாறுவதோடு மாற்றங்களையும் கொண்டு வர வேண்டும். அந்த மாற்றங்கள் நிகழ இப்போதே நடவடிக்கையில் இறங்குவதோடு தொற்றா நோய் கண்டுள்ள நாங்கள் அதற்குத் தலைமை வகிக்க வேண்டும்.

## எங்களின் கேள்விகள்

**தொற்றா நோய்கள் கண்டவர்களான நாங்கள் கீழ்க்காணும் கோரிக்கைகளை முன் வைக்கிறோம்.**



### அரசாங்கம்

i) துணைப் பிரதமர் தலைமையிலான சுகாதார ஊக்குவிப்பு சுற்றுச்சூழலுக்கான அமைச்சரவைக் குழுவிற்குப் புத்துயிரூட்டுவது உட்பட அரசாங்கத்தின் உயர் மட்ட நடவடிக்கையாக தொற்றா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மீது தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

ii) தொற்றா நோய் கண்டோருக்கான முழுமையான இலக்குகள், காலவரையறை மற்றும் அறிகுறிகள் ஆகியவற்றை வழங்கக்கூடிய தேசிய வியூகத் திட்டத்தை அமல்படுத்துவதோடு அதனைக் கண்காணித்து மதிப்பீடு செய்யும் வரைவு திட்டங்களையும் அமல்படுத்த வேண்டும்.

iii) அரசாங்கத்தின் அனைத்து துறைகளையும் கடந்து நீடித்திருக்கக்கூடிய நிதி வளத்துடன் கூடிய தொற்றா நோய் தடுப்பு திட்டத்தைத் தொடர்ந்து மேம்படுத்த வேண்டும்.

iv) திட்டங்கள் மற்றும் கொள்கைகளில் ‘அனைத்திலும் ஆரோக்கியம்’ எனும் அணுகுமுறைக்குப் புத்துயிரூட்டுவதோடு இதனை ஆக்கப்பூர்வமான முறையில் தொடர்ந்து அமல்படுத்த வேண்டும். இந்த அணுகுமுறையை அரசாங்கத்தின் உயர் மட்ட செயற்குழுக்களான (1)சுகாதார ஊக்குவிப்பு சுற்றுச் சூழல் மற்றும் ஆரோக்கிய வாழ்க்கை முறைக்கான சுகாதார குழு (2) சுகாதார ஊக்குவிப்பு சுற்றுச் சூழல் மற்றும் ஆரோக்கிய வாழ்க்கை முறைக்கான தொழில்நுட்ப குழு ஆகியவற்றின் வழி ஊக்குவிக்க வேண்டும்.

v) மாற்றக்கூடிய ஆபத்தை விளைவிக்கும் பொருட்களான புகையிலை, இனிப்பு பானங்கள் மற்றும் அளவுக்கதிகமாகப் பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள் மீதான வரிவிதிப்பு தொடரப்படுவதோடு அவற்றின் வழி கிடைக்கும் வருமானம் தொற்றா நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

vi) நிலையான நிதி ஒன்று மீண்டும் அமைக்கப்பட வேண்டும். சுகாதார ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் மேற்பார்வை, ஒழுங்கு முறை மற்றும் அமலாக்கம் ஆகிய பணிகளைக் கண்காணிக்க சுயேட்சை முறையிலான தேசிய சுகாதார ஊக்குவிப்பு வாரியத்தை அமைக்க வேண்டும்.

vii) தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியங்களைக் குறைப்பதற்கு கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும்.அதோடு, நீண்ட காலம் நிலைக்கக்கூடிய ஆரோக்கியமான சுற்றுச் சூழல் மற்றும் ஆரோக்கியமான நடவடிக்கைகளை ஊக்குவிக்க வேண்டும்.

viii) புகையிலை, மதுபானம், அளவுக்கதிகமாகப் பதப்படுத்தப்பட்ட ஆரோக்கியமற்ற உணவு வகைகள் ஆகிய தொழிற்துறைகளை ஒருங்கிணைக்க பெயரிடுதல், விளம்பரம், ஊக்குவிப்பு, ஆதரவாளர்கள் போன்ற விவகாரங்கள் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும்.

ix) தொற்றா நோய் தடுப்பு மீதான விழிப்புணர்வு குறித்து அரசாங்க ஊடகம், சமூக ஊடகம் போன்றவற்றில் தொடர்வதோடு இது அரசாங்க நிகழ்ச்சிகளில் ஓர் அங்கமாக இருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

## மக்கள் பிரதிநிதிகள்
(நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்)



i) தொற்றா நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரும் அனைத்து நிலையிலான சட்ட மற்றும் சட்ட அமலாக்கத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும்.

ii) தங்களின் சொந்த ஏற்பாடு உட்பட அனைத்து நிலைகளிலும் தொற்றா நோய் தடுப்பு நடவடிக்கைகளை ஆதரிப்பதோடு அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

iii) குறிப்பிட்ட சில தொற்றா நோய் தடுப்பு நிகழ்ச்சிகள் மற்றும் கொள்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.



## சுகாதார அமைச்சு

i) சுகாதார வடிவமைப்புகளில் தொற்றா நோய் தடுப்பு வியூகங்களுக்குத் தேவையான வளங்களை ஒதுக்கீடு செய்து அமல்படுத்த வேண்டும்.

ii) ஆரோக்கிய ஊட்டச் சத்துகள்' குறித்த தவறான அல்லது போலி அறிவியல் மற்றும் கற்பனை கதைகளுக்கு எதிரான விழிப்புணர்வை அதிகரிக்கும் தேசிய அளவிலான கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும்.

## கல்வி அமைச்சு



i) அனைத்து கல்வி நிலைகளிலும் தொற்றா நோய் தடுப்பு குறித்த சிறப்பு விளக்க ஏடுகளைத் தயாரித்து விநியோகம் செய்ய வேண்டும்.

ii) அனைத்து கல்வி நிலைகளிலும் தொற்றா நோய் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் மற்றும் நோய் தடுப்பு குறித்த உள்ளடக்கங்களைக் கொண்ட பாடத் திட்டங்களை மேம்படுத்த வேண்டும்.

iii) கல்வி கழகங்கள் மற்றும் அவற்றின் சுற்றுப் புறங்களில் ஆரோக்கியமான சுற்றுச்சூழலை ஊக்குவிக்க விதிமுறைகளை அமல்படுத்த வேண்டும். அவற்றுள்:

a) வாங்கக்கூடிய விலையில் ஆரோக்கியமான உணவு வகைகள் கிடைப்பதற்கான வாய்ப்பை அதிகரிப்பது

b) புகையிலை பொருட்கள் உட்பட ஆரோக்கியமற்ற உணவு வகைகளின் விற்பனை மற்றும் விளம்பரங்களை நிறுத்த வேண்டும்

c) உடற்பயிற்சி நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பான இடங்களை ஏற்படுத்தி அவற்றை நிலைபெறச் செய்தல்



## சுகாதார சேவை வழங்குவோர் மற்றும் பணியாளர்கள்

i) சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் தொற்றா நோய் தடுப்பின் அவசியம் குறித்து தொடர்ந்து அறிவுறுத்த வேண்டும்.

## தனியார் துறை/ வர்த்தக சமூகம்



i) அனைத்து துறைகளின் பணியாளர்களுக்காக தொற்றா நோய்கள் மற்றும் அவற்றின் அபாய கூறுகள் குறித்த கல்வி விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை நடவடிக்கைகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.

ii) தொற்றா நோய் மற்றும் அதன் அபாய கூறுகள் குறித்து தற்போது நடைபெற்று வரும் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் உட்படுத்த வேண்டும். பயிற்சி/ கற்பித்தல் நடவடிக்கைகளில் தொழில் கழக, தனியார் கல்வி துறை பணியாளர்கள் உட்பட அனைத்து நிலைகளில் உள்ளோரையும் உட்படுத்துவது அவசியம்.

iii) ஆரோக்கியமான வேலையிடச் சுற்றுச் சூழலை உருவாக்கும் மற்றும் அமல்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.



## சமூக பொது அமைப்புகள்

i) தொற்றா நோய் தடுப்பு குறித்த சமூகம் சார்ந்த மற்றும் தொடர் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து மேம்படுத்தவும் நடத்தவும் வேண்டும்.

ii) அனைத்து நிலைகளிலும் தொற்றா நோய் தடுப்பு குறித்து பிரச்சார மற்றும் ஆதரவு வழங்கும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சிகளைத் தொடர வேண்டும்.

## தனிநபர்/ தொற்றா நோய் கண்டோர் அமைப்புகள்



i) குடும்ப, அமைப்புகள் மற்றும் சமூக நிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் தொற்றா நோய் தடுப்பு நடவடிக்கைகளின் வீரராகத் திகழ வேண்டும்.

# சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு

## உள்ளடக்கம்

தொற்றா நோய்கள் கடுமையானவை, மேலும் இவை ஆயுள் முழுவதும் நீடிக்கக்கூடியவை. நீடித்த மற்றும் கூடுதல்பட்ச பராமரிப்பை உறுதிப்படுத்த தொற்றா நோய் கண்டோர் மற்றும் சுகாதார பராமரிப்பு பணியாளர்கள் ஆகியோருக்கு இடையே பன்முக அணுகுமுறை தேவை.

தொற்றா நோய் கண்டோருக்குத் தொடர்ச்சியான மற்றும் நீண்ட கால சிகிச்சை பராமரிப்பு தேவை. மேலும், இந்நோயைச் சிறப்பாக நிர்வகிப்பதற்கு ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு தேவை.

தொற்றா நோய்களின் வகைகள், பாதிப்பு நிலை மற்றும் தொற்றா நோயாளிகளின் பாதிப்பு என்பது வாழ் நாள் முழுவதும் தனித்தனியான சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு அவசியம்.

## எங்கள் பிரச்னைகள்

தொற்றா நோய் கண்டோரான் நாங்கள், எங்கள் நோய்களை நிர்வகிப்பது தொடர்பான சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு ஆகியவற்றில் இடம் மற்றும் சமூக பொருளாதார சூழல் ஆகியவற்றுக்கு ஏற்ப பல்வேறு சவால்கள் நாங்கள் எதிர்நோக்குகிறோம். தரமான சிகிச்சை மற்றும் பராமரிப்பு எங்களுக்கு புறக்கணிப்பட்டுள்ளது.

எங்களுக்குத் தேவையான சிகிச்சை மற்றும் பராமரிப்பு பல நேரங்களில் தாமதப்படுவதால்நாங்கள்கடுமையான பாதிப்பை ஏதிர்நோக்குகிறோம். நீண்ட கால வலி குறைப்பு மற்றும் புதிய வகை சிகிச்சைகளைப் பெறுவதிலும் நாங்கள் கடுமையான சவால்களை எதிர்நோக்குகிறோம்.

எங்களை சிறப்பாக நிர்வகிக்கத் தேவையான முறைகள் மற்றும் அறிவாற்றலை நாங்கள் கொண்டிருக்கவில்லை. உடல்நிலையை நிர்வகிக்கும் சூழல்களில் பெரும்பாலும் எங்களுக்கு கௌரவமான சிகிச்சை வழங்கப்படுவதில்லை, எங்கள் வாழ்க்கையை சீர்குலைக்கக் கூடிய இத்தகைய குறைபாடுகளை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். தரமிக்க பராமரிப்பு, சிகிச்சை மற்றும் ஆதரவு வழங்கப்பட்டால்தொற்றா நோய் கண்டோரான நாங்கள்எங்கள் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் ஆக்ககரமான முறையில் பங்காற்ற முடியும்.

## எங்களின் கேள்விகள்

**தொற்றா நோய்கள் கண்டவர்களான நாங்கள் கீழ்க்காணும் கோரிக்கைகளை முன் வைக்கிறோம்.**



### அரசாங்கம்

i) தடுப்பு சேவைகள், விரைவாக நோயைக் கண்டறிதல், மனோவியல் ஆதரவு, புதுவாழ்வு மற்றும் பன்முக பராமரிப்பு போன்றவை உட்பட உலக தரத்திலான சமத்துவமான பராபரிப்பு ஆகியன தொடர்ந்து அனைத்து தொற்றா நோய் கண்டோருக்கும் கிடைப்பதற்கான உத்தரவாதம் வேண்டும்.

ii) தரமான பராமரிப்பு மற்றும் சிகிச்சையைப் பெற தொற்றா நோய் கண்டோரான நாங்கள் திவாலாகாமல் இருப்பதை தவிர்க்க நீடித்த அளவிலான சுகாதார நிதி ஒன்றை மேம்படுத்த வேண்டும்.

iii) மேம்படுத்தப்பட்ட சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு ஆகியவற்றுக்கான மனிதவளம் மற்றும் அடிப்படை வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்த தொற்றா நோய்கள் மற்றும் தொற்றா நோய் கண்டோர் ஆகியவற்றுக்கு இடமும் முக்கியத்துவமும் அளிக்க வேண்டும்.

### மக்கள் பிரதிநிதிகள்
(நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்)



i) தொற்றா நோய் கண்டோரான எங்களுக்கும் மற்றும் அனைவருக்கும் மேலும் சிறப்பான சுகாதார பராமரிப்பு சேவை கிடைப்பதை உறுதிசெய்ய சுகாதார துறையில் மறுமலர்ச்சி எற்பட வகை செய்யும் அரசியல் இலக்கிற்கு வித்திட வேண்டும்.

ii) தொற்றா நோய் நிர்வாகத்திற்காக மத்திய,மாநில மற்றும் ஊராட்சி அளவிலான நிதி ஒதுக்கீட்டை வலியுறுத்துவது மற்றும் ஆதரிப்பது.

ii) தொற்றா நோய் நிர்வாகம் ஆக்கப்பூர்வமாக இருப்பதற்கு தேவையான வளங்கள் இருப்பதை உறுதி செய்ய தொடர்ந்து வாதிட வேண்டும்.



### சுகாதார அமைச்சு

i) தொற்றா நோய் நிர்வாகம் மேலும் சிறப்பாக அமைய பொது தனியார் பங்காளித்துவம் உட்பட சுகாதார முறையை வலுப்படுத்த வேண்டும்.

ii) பொது மற்றும் தனியார் துறையில் தொற்றா நோய் கண்டோர் மற்றும் அந்நோய்களின் நிலை மீதான கண்காணிப்பு அமலாக்கம் ஆக்கப்பூர்வமாக இருக்க வேண்டும்.

ii) பொது மற்றும் தனியார் துறைகளில் தொற்றா நோய் கண்டோருக்கு சமத்துவமான சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

iv) தொற்றா நோய் நிர்வாகம் குறித்த அனைத்து அம்சங்களையும் பொது மற்றும் தனியார் துறைகளில் ஒருங்கிணைக்க வேண்டும்.

## சுகாதார சேவை வழங்குவோர் மற்றும் பணியாளர்கள்



i) தொற்றா நோய் கண்டோருக்கான வலுமிக்க ஆதரவாளர்களாக திகழ வேண்டும்.

ii) தொற்றா நோய் கண்டோரை பராமரிக்கும் பணியாளர்களை ஏற்புடைய கல்வி வியூகங்களை இயற்றுவதோடு ஊக்குவிக்க வேண்டும்

தொற்றா நோய் கண்டோருக்கு வழங்கப்படும் பராமரிப்பு சேவையை மேம்படுத்த அவற்றை ஒருங்கிணைக்க வேண்டும்.

iv) தொற்றா நோய் கண்டோருக்கு தனித் தனிப் பிரிவுகளில் வழங்கப்படும் சிகிச்சை மற்றும் சமூக பாதுகாப்பு போன்றவை குறித்த தகவல் பரிமாற்றம் வலுப்படுத்தப்பட வேண்டும்.

v) தொற்றா நோய் கண்டோரை பராமரிப்பு பணியாளர்கள் மரியாதை மற்றும் கௌரவமாக நடத்துவதற்கான வழிகாட்டி கல்வி நடவடிக்கைகள் மேம்படுத்தப்படுவதோடு அமல்படுத்தப்பட வேண்டும்.

vi) அனைத்து நிலைகளிலும் உள்ள தொற்றா நோய் கண்டோருடன் தொடர்பு கொள்வது மற்றும் அவர்களுக்கு நோய் பற்றிய கல்வி போதிக்கும் முறை மேம்படுத்துவதோடு அமல்படுத்தப்பட வேண்டும்.



## தனியார் துறை/ வர்த்தக சமூகம்

i) சுகாதார அமைப்பை வலுப்படுத்த அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

ii) தொற்றா நோய் கண்டோருக்கு பராமரிப்பு மற்றும் ஆதரவு வழங்குவதற்கான புதிய வழிகளை திட்டமிடுவதோடு அமல்படுத்தப்பட வேண்டும்.

iii) தனியார் மருத்துவ துறையில் தொற்றா நோய் கண்டோர் எதிர் நோக்கும் நிதிச் சுமையைக் குறைக்க உதவுவது.

iv) தனியார் துறையில் பணியாற்றும் தொற்றா நோய் கண்டோர் சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு பெறுவதற்கு ஏதுவான புதிய நிதி முறையை திட்டமிட்டு அமல்படுத்த வேண்டும்.

v) தனியார் துறையில் சிகிச்சை பெறும் தொற்றா நோய் கண்டோருக்கு சமத்துவமான பராமரிப்பு வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

## சமூக பொது அமைப்புகள்



i) அனைத்து நிலையிலான தொற்றா நோய் கண்டோர் சிகிச்சை, பராமரிப்பு மற்றும் ஆதரவு பெறுவதற்கு தடைகளாக இருப்பவற்றுக்கு தீர்வு மற்றும் துணை புரிய வேண்டும்.



## தனிநபர்/ தொற்றா நோய் கண்டோர் அமைப்புகள்

i) தொற்றா நோய் கண்டோர் கட்டமைப்புகள் மற்றும் ஆதரவு அமைப்புகளை தோற்றுவிக்க வேண்டும்.

ii) கல்வியின் மூலம் தொற்றா நோய் கண்டோருக்கு நோய் நிர்வாகம் மற்றும் விழிப்புணர்வை போதிக்க சுகாதார பராமரிப்பாளர்கள் மற்றும் பணியாளர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

# அர்த்தமுள்ள

## உள்ளடக்கம்

தொற்றா நோய் நிர்வாகம் தொடர்புடைய பல தரப்பினரிடையேஆபத்தை சந்திக்கக்கூடிய ஒரே தரப்பு தொற்றா நோய் கண்டவர்களே. எங்கள் உரிமைகள் குறித்து குரல் எழுப்புவதில் நிபுணர்கள் நாங்கள். எங்கள் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் முன் வைக்கிறோம்

எனவே, கொள்கை திட்டமிடல் மற்றும் அமலாக்க நடவடிக்கைகளின் போது தொற்றா நோய் கண்டோரான எங்களைத் தவிர்ப்பது நியாயமற்ற மற்றும் அர்த்தமற்ற நடவடிக்கையாகும்.

நோய் தொடர்பான அனைத்து நிலைகளில் தொற்றா நோய் கண்டோரான எங்களையும் உடன் சேர்த்துக் கொள்வது அர்த்தமுள்ளதாகும்.

திட்டங்கள் மற்றும் கொள்கைகளை மேம்படுத்துதல் மற்றும் அமலாக்க நடவடிக்கைகளில் தொற்றா நோய் கண்டோரின் அர்த்தமுள்ள ஈடுபாடு ஆக்கப்பூர்வ பயன்களைக் கொண்டு வருவதற்கான ஒரே வழியாகும். மேலும், உண்மையான மற்றும் நீடித்த மாற்றங்களை தொற்றா நோய் கண்டோரின் அர்த்தமுள்ள ஈடுபாடே உறுதிப்படுத்தும்.

## எங்கள் பிரச்னைகள்

எங்கள் ஆயுளை நிர்ணயிக்கக் கூடிய நோய்களால் நேரடியாக பாதிக்கப்பட்டுள்ள எங்கள் நோய்களை நிர்வகிப்பது தொடர்பில் நாடும் சுகாதார அமைப்பும் தொற்றா நோய் கண்டோரான எங்களின் ஈடுபாட்டை அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்தப்படவில்லை. கொள்கை வரைதல் அல்லது அமலாக்கத்தில் எங்களின் பிரதிநிதித்துவம் பெரும்பாலும் மறுக்கப்படுகிறது. அதே நேரம் எங்களையும் பங்கெடுக்க அனுமதித்தாலும், ஆக்கப்பூர்வ கருத்தை தெரிவிப்பதற்குப் பதிலாக மௌனம் காக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர்.

தொற்றா நோய்கள் நிர்வாகம் தொடர்பான தேசிய நிலையிலான சட்ட திட்டங்கள் இயற்றுவதில் தொடங்கி மாவட்ட நிலையிலான நிகழ்ச்சிகள் வரையில், தொற்றா நோய் கண்டோருக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டுள்ளன. ஒரு பங்காளியாக எங்களை நடத்தவில்லை. அதிகார குரல் கேட்கும் அரங்கங்களில் நோய்களால் நேரடியாக பாதிக்கப்பட்டோரின் குரல் ஒலிக்க வாய்ப்பளிக்கவில்லை. தொற்றா நோய்களை எதிர்கொள்வதில் ஒன்றிணைந்து முக்கிய பங்காற்ற நாங்கள் தயாராக உள்ளோம் ஆயினும் ஒருவரும் எங்களை இணைத்துக் கொள்ளவில்லை.

## எங்களின் கேள்விகள்

**தொற்றா நோய்கள் கண்டவர்களான நாங்கள் கீழ்க்காணும் கோரிக்கைகளை முன் வைக்கிறோம்.**



### அரசாங்கம்

i) அனைத்து நிலைகளிலான தொற்றா நோய் கண்டோர் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் அரசாங்க செயற்குழு கூட்டங்களில் பிரதிநிதிக்கும் வாய்ப்புகள் வழங்க வேண்டும்.

ii) தொற்றா நோய் கண்டோர் சார்ந்த அல்லது தொற்றா நோய் துறையில் பணிபுரியும் சமூக பொது அமைப்புகள் தோற்றுவிக்கப்படுவதற்கு ஆதரவு வேண்டும்.

### மக்கள் பிரதிநிதிகள்
(நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள்)



i) மத்திய/ மாநில நிலைகள் உட்பட அனைத்து நிலைகளிலான நிகழ்ச்சிகளிலும் தொற்றா நோய் கண்டோரின் குரல் செவிமடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் வேண்டும்.

ii) தங்கள் தொகுதிகளைச் சேர்ந்த தொற்றா நோய் கண்டோரை முழுமையாக புரிந்து கொள்ள அவர்களுடன் அடிக்கடி கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.



## சுகாதார அமைச்சு

i) தொற்றா நோய் கண்டோரின் அர்த்தமுள்ள ஈடுபாட்டை ஊக்குவிக்கும் வகையிலான நோயாளிகளை மையப் படுத்திய பராமரிப்பு கட்டமைப்புகளை திட்டமிட்டு அமலாக்க வேண்டும்.

ii) அதிகாரப்பூர்வ சுகாதார பராமரிப்பு கழக கட்டமைப்புகளில் தொற்றா நோய் கண்டோரை கல்வி புகட்டுபவர்கள் மற்றும் பேச்சாளர்களாக அடையாளம் கண்டு மேம்படுத்த வேண்டும்.

## சுகாதார சேவை வழங்குவோர் மற்றும் பணியாளர்கள்



i) நோயாளிகள் சம்பந்தப்பட்ட பராமரிப்பை முடிவு செய்கையில் தொற்றா நோய் கண்டோருடன் ஆக்கப்பூர்வமாக கலந்துரையாட வேண்டும்

ii) சம்பந்தப்பட்ட நோயாளிகளைன் அன்றாட பராமரிப்பு தொடர்பில் தொற்றா நோய் கண்டோரின் கூட்டமைப்புடன் ஓர் ஆக்கப்பூர்வ ஒத்துழைப்பு நல்குவது.



## தனியார் துறை/ வர்த்தக சமூகம்

i) சமூக கடப்பாட்டு நடவடிக்கைகள் உட்பட தொற்றா நோய் கண்டோர் அமைப்புகள்/ கூட்டமைப்புகள் ஆகியவற்றுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ள வேண்டும்.

## சமூக பொது அமைப்புகள்



i) தொற்றா நோய் கண்டோர் தொடர்பான கொள்கைகள் அல்லது நிகழ்ச்சி திட்டமிடல்கள் மற்றும் முடிவு எடுக்கும் தருணங்களில் சம்பந்தப்பட்ட அமைப்புகள் உட்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.



## தனிநபர்/ தொற்றா நோய் கண்டோர் அமைப்புகள்

i) தொற்றா நோய் கண்டோர் தொடர்பான கொள்கைகள் அல்லது நிகழ்ச்சி திட்டமிடல்கள் மற்றும் முடிவு எடுக்கும் தருணங்களில் நாம் பங்கேற்கும் வாய்ப்புகளை தேட வேண்டும்

# OUR VIEWS, OUR VOICES

An initiative by the NCD Alliance and people living with NCDs

நாம் அடிக்கடி ஒன்று கூட வேண்டும். இப்போது 12 பேர் உள்ளோம். இது நாளை 30 ஆகலாம்

சமூக உரையாடல்பங்கேற்பாளர்


எங்கள் தேவைகளுக்கு குரலெழுப்ப சமூக உரையாடல் போன்று மேலும் பல நடவடிக்கைகள் நடைபெற வேண்டும்

சமூக உரையாடல் பங்கேற்பாளர்

மலேசியர்களான நாங்கள், அரசாங்கம் வழங்கும் அணுகூலங்களை குறிப்பாக எங்கள் நோய்களுக்கான சிகிச்சை போன்றவற்றை பெறுவதற்கான வாய்ப்பு வேண்டும் .

சமூக உரையாடல் பங்கேற்பாளர்

#NCDvoices





# OUR VIEWS, OUR VOICES

An initiative by the NCD Alliance and people living with NCDs

NCD MALAYSIA

NCDAlliance

To learn more about the Advocacy Agenda of People Living with NCDs and how you can take action, visit

**ncdalliance.org**

#NCDvoices